வாக்குமூலம்

குற்றவியல் நீதிமன்றம், இராமநாதபுரம்

வழக்கு எண் STC. No. 514/2024

வழக்கு சாட்சி – PW 2

| | | | |
|---|---|---|---|
| பெயர் | :: திரு. ஜாபர் சாதிக் | தொழில் | :: |
| த/க பெயர் | :: | வயது | :: |
| கிராமம் | :: | | |
| தாலுகா | :: | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of 21.01.2026.

(எதிரி ஆஜர் இல்லை. பிரிவு 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)

**முதல் விசாரணை** (நேரம் : காலை 10.50 மணி)

நான் சென்னை, மருந்து ஆய்வுக்கூடத்தில் அரசு பகுப்பாய்வாளராக பணியாற்றி தற்போது ஓய்வு பெற்றுள்ளேன். இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க எனக்கு அழைப்பாணை வந்தது. அதனடிப்படையில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். 01.08.2022 ம் தேதி நான் மேற்படி அலுவலகத்தில் பணியில் இருந்தபோது Ace Cold total Syrup என்ற 100 மில்லி கொண்ட ஒரு பாட்டில் மருந்து (தொகுப்பு எண். PL 21001, Manufacturing date March 2021, Expiry date February 2023, Manufacturer Name : Johnson & Smith Co, Bangalore) பகுப்பாய்விற்காக சீல் இடப்பட்டு எங்கள் அலுவலகத்தில் கிடைக்கப்பெற்றது. நான் அதனை பகுப்பாய்வு செய்தபோது Phenylephrine Hydrochloride 5 மில்லிக்கு 5mg இருக்க வேண்டியதற்கு பதிலாக 3.36mg மட்டுமே இருந்தது. அதன் குறைந்தபட்ச அளவு 4.5mg இருக்க வேண்டும், 67.2 சதவீதம் வந்ததால் அளவு குறைவாக உள்ளதாக தரச்சான்று கொடுத்தோம். மேற்படி மருந்து பாட்டில் படிவம் 18 மூலமாக மருந்து ஆய்வாளர் வழங்கினார். அந்த படிவம் 18 அ.சா.ஆ.2

J JEYA SUTHAHAR

Digitally signed by J JEYA SUTHAHAR
Date: 2026.01.21 17:56:44 +0530

ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. நான் வழங்கிய தரச்சான்று படிவம் 13 படி வழங்கினேன். அது அ.சா.ஆ.3 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. அந்த படிவம் 13ல் உள்ள கையெழுத்து என்னுடையது தான்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை** :

இல்லை

**மறுவிசாரணை – இல்லை.**

சாட்சி என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்குப் படித்து காட்டி அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

J JEYA SUTHAHAR
Digitally signed by J JEYA SUTHAHAR
Date: 2026.01.21 17:56:49 +0530

தலைமை நீதித்துறை நடுவர்,
இராமநாதபுரம்.